# பாமரர்களின் பல்கலைக்கழகம் கலைஞர்!



**1989** ஐக்கிய நாடுகள் சபை (United Nations Organization) இன்று சொல்வதை அன்றே நிறைவேற்றியவர் கலைஞர்

2012 ஆம் ஆண்டு பிரேசில் நாட்டில் ஐக்கிய நாடுகளின் கருத்தரங்கில் (United Nations Conference), நிரந்தர மேம்பாட்டு குறிக்கோள்கள் (Sustainable Development Goals) உருவாக்கப்பட்டுள்ளது. இப்படியான உலகளாவிய நோக்கம், வருகின்ற காலங்களில் சுற்றுச்சூழல், அரசியல், பொருளாதாரம் மற்றும் கல்வியில் மேம்பட, அதற்கான எல்லைகளை (Targets) நிர்ணயிப்பதோடு, அதனை எட்டுவதற்கு சவால்களை எப்படி எதிர்கொள்வது என்பதுதான். 2015 ஆம் ஆண்டு, ஐக்கிய நாடுகளின் அமைப்பு, அதற்கான 17 நோக்கங்களை (Goals) நிர்ணயித்து, 2015-2030 ஆண்டுகளுக்குள் அனைத்து நாடுகளும் அனைத்து நோக்கங்களையும் சென்றடைய வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டது.

17 நோக்கங்களில் மிக முக்கியமானதாக உலகநாடுகளால் முன்னெடுக்கப்பட்டவை, நோக்கம் 4 (Goal 4) அதாவது அனைவருக்கும் கல்வி மற்றும் தரமான கல்வி. ஏனெனில் கல்வி பாகுபாடின்றி அனைவருக்கும் சென்றடைந்தால், பிற துறை முன்னேற்றங்களும் தானாக அமைந்துவிடும் என்பது தான். ஐக்கிய நாடுகள் அமைப்பின்படி 2030க்குள் தகுதியுடைய அனைவருக்கும் இலவசக்கல்வி, ஆண், பெண் பேதமின்றி கிடைக்கச்செய்ய வேண்டும் என்பதாகும். இதனை ஒரு சவாலாக எடுத்துக்கொண்டு பள்ளிகள் முதல் பல்கலைக்கழகங்கள் வரை மாணவர் எண்ணிக்கையினை உயர்த்திட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டனர்.

2023-ல் உலகத்திற்கு ஐக்கிய நாடுகள் சபை (UNO) அறைகூவல் கொடுத்தவற்றை 54 ஆண்டுகளுக்கு முன்பே (1969-ல்) அனைவருக்கும் கல்வி கட்டாயம் என்பதை நடைமுறைப்படுத்தியவர் கலைஞர்.

இன்று இந்தியாவின் உயர்கல்வி மாணவர் சேர்க்கையின் மொத்த பதிவு விகிதம் (GER-Gross Enrolment Ratio) 26 சதவிகிதமாக இருக்கிறபோது, அதனை 30 சதவிகிதமாக 2023-க்குள் உயர்த்த வேண்டும் என ஒன்றிய அரசு திட்டமிட்ட நிலையில், தமிழ்நாட்டில் மொத்த பதிவு விகிதம் 51 சதவிகிதமாக தற்போது இருக்கிறது என்றால், தமிழ்நாட்டில் ஏழை எளிய மாணவர்கள் அனைவருக்கும் அனைத்துநிலை வகுப்புகளிலும் சேர்க்கை பெற்று படிக்கிறார்கள் என்றால் அதற்கு வித்திட்டவர் கலைஞர், அதை விளைச்சலாக்கியது தற்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

### கல்வியின் இலக்கணத்தை கலைஞருக்கு அளித்த ஆசான்கள்!

“கல்வி என்ற ஆயுதத்தால் மட்டுமே, மக்களை சமூக அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறச் செய்தும், அடித்தளத்திலிருக்கின்ற ஒட்டு மொத்த மக்களும் சமூக, பொருளாதார அரசியலில் மேம்பாடு அடையச் செய்ய முடியும்.”

**- பாபா சாகேப் அம்பேத்கர்**

“கல்வி என்ற மிகவும் சக்தி வாய்ந்த கருவியால் உலகத்தில் மிகப்பெரிய மாறுதலைக் கொண்டு வரமுடியும். அத்தோடு தனிமனிதனும் தரமான வாழ்வு பெறுவதோடு உலகத்தையும் வளர்ச்சி பெறச் செய்ய முடியும்.”

**- நெல்சன் மண்டேலா**

“வயிற்றுப் பிழைப்பு, சுய மரியாதை, சுதந்திரம், அன்பு, பரோபகாரம் முதலியவற்றோடு கண்ணியமாக உலக வாழ்க்கையை நடத்த தகுந்த அறிவைத் தரும் கல்வி. அத்தகைய கல்வியினை இலவசமாக வழங்க வேண்டும்.

ஆண்களைக் காட்டிலும் பெண்களுக்குக் கல்வி அவசியம். 22 வயது வரை பெண்களுக்கு கல்வி அளித்து வேலை பெறுவதற்குரிய தகுதிகளையும் வருமானமும் ஈட்டுவதற்கு வழி வகை செய்து தர வேண்டியது இந்நாட்டின் கடமை.”

**- தந்தை பெரியார்**

எழுதப்பட்டிருக்கின்ற இந்திய அரசியலமைப்புச் சட்டம் 21A மற்றும் சொல்லப்பட்ட கல்விக்கான இலக்கணங்கள் எல்லாக் காலத் தலைவர்களால் வாசிக்கப்பட்டிருந்தாலும், அடிப்படைச் சட்டத்தில் கல்வி கொடுத்தல் அவசியம் என்பதை தீர்க்கதரிசிகளான சமூக நீதி காவலர்கள் அம்பேத்கர், நெல்சன் மண்டேலா, தந்தை பெரியாரின் வேண்டுதல்களை, எதிர்பார்ப்புகளை, தான் இத்தமிழ்நாட்டை ஆண்ட காலங்களில் கடைக்கோடித் தமிழனுக்கும் கல்வி கிடைக்க, வழிவகுத்துக் கொடுத்த தன் மூலம் நிறைவேற்றிக் காட்டியவர்தான் முத்தமிழறிஞர் கலைஞர்.

### சமூகநீதிக்கு முன் சட்டங்களை சாமான்யர்களுக்கும் வசப்படுத்தியவர்!

1969ல் கலைஞர் அவர்கள் முதன்முதலாக முதல்வராக பொறுப்பேற்றபோது, கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் இட ஒதுக்கீட்டினை, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு, 25 சதவிகிதத்திலிருந்து 31 சதவிகிதமாகவும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 16 சதவிகிதத்திலிருந்து 18 சதவிகிதமாகவும் உயர்த்தி சட்டம் இயற்றினார். தமிழ்நாட்டில் முதன்முதலாக, 1969ல்பிற்படுத்தப்பட்டோர் நலம் பற்றி பரிந்துரை செய்ய ஏ.என்.சட்டநாதன் தலைமையில் பிற்படுத்தப்பட்ட வகுப்பு ஆணையம் ஒன்றை உருவாக்கினார். அத்தோடு தனது ஆட்சிக் காலத்தில் (1971-76) பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மேம்பாட்டிற்கென்று தனி அமைச்சகத்தை ஏற்படுத்தினார்.

சமுதாயத்தில் மக்களுக்குள்ளேயே சாதி மற்றும் பிறப்பு அடிப்படையில் பல்வேறு ஏற்றத்தாழ்வு இருத்தல் கூடாது என்று, ஒதுக்கீட்டிற்குள் ஒதுக்கீடு (உள் ஒதுக்கீடு) பிற்படுத்தப்பட்ட மொத்த 50 சதவிகித ஒதுக்கீட்டில், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கென்று (MBC) 20 சதவிகித ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்தார். அத்தோடு ஆதி திராவிடருக்கென்று ஒதுக்கப்பட்டிருந்த 18 சதவிகித ஒதுக்கீட்டில், மிகவும் பின்தங்கியுள்ள அருந்ததியருக்கு 3 சதவிகித உள் ஒதுக்கீடு சட்டத்தைப் பிறப்பித்தார் கலைஞர்.

அகில இந்திய அளவில் கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் பிற்படுத்தப்பட்ட சமூகத்தினருக்கென்று ஒதுக்கீட்டை உறுதி செய்ய அமைக்கப்பட்ட, பி.பி.மண்டல் தலைமையிலான அகில இந்திய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆணையம், பரிந்துரைகளை அமல்படுத்த மிகப்பெரிய +போராட்டத்தை முன்னெடுத்த கலைஞர், வி.பி. சிங், பிரதமர் பதவி ஏற்றதும், பிற்படுத்தப்பட்டோரை (BC), பிற பிற்படுத்தப்பட்டோர் (OBC) என்று உருவாக்கி, அவர்களுக்கான 27 சதவிகித ஒதுக்கீடு கிடைக்க வழிவகை செய்ததன் மூலம் இந்தியாவின் அனைத்து பிற்படுத்தப்பட்ட வர்களும் பயன்பெற மிக முக்கிய காரணமானவர் கலைஞர்.

### பல்கலைக்கழகங்களை உருவாக்கி பாமரனும் படிக்க வழிவகுத்தவர்!

1967க்கு முன், தமிழ்நாட்டில் 109 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இருந்தன, 2 மட்டுமே அரசுக்குச் சொந்தமானவை. கலைஞர் தலைமையில், 1976ல் 68 புதிய கல்லூரிகள் நிறுவப்பட்டன. 2010 வாக்கில், கல்லூரிகளின் எண்ணிக்கை 587ஐ எட்டியது, இதில் 62 அரசாங்கத்திற்குச் சொந்தமானவை, 9 பல்கலைக்கழகக் கல்லூரிகள், 133 அரசு உதவி பெறும் கல்லூரிகள் மற்றும் 383 சுயநிதிகள் உட்பட, 709,162 மாணவர்கள் இதில் படித்தனர்.

உயர்ந்த சாதியினர், பொருளாதாரத்தில் பெரும் வசதி கொண்டோருக்கு மட்டும் கல்வி பெறுதல் சாத்தியம் என்ற நிலை. குக்கிராமத்தில் வாழ்ந்தவர், கூலி வேலைபார்த்தவர், அடுத்த வேளை உணவிற்கு அல்லல்பட்டவர், ஓலைக் குடிசையில் வாழ்ந்தவர், வாழ்வாதாரத்திற்கே வழி இல்லாமல் வாழ்ந்தவரின் பிள்ளைகளை-பள்ளிக்கும் கல்லூரிக்கும் படிக்க அனுப்ப இயலாதவர்களுக்கும் கல்வி அளித்து சரித்திரம் படைக்க வழிவகுத்துக் கொடுத்தவர் கலைஞர்.

### துணைவேந்தர்கள் நியமனம்!

முத்தமிழறிஞர் கலைஞர் முதலமைச்சராவதற்கு முந்தைய காலங்களில், மிட்டாமிராசுதாரர், நீதிபதிகள், வெளிநாட்டில் பட்டம் பெற்றவர்கள், மிகப் புகழ்பெற்ற மருத்துவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் போன்ற, பெரும்பாலும் உயர்சாதி வகுப்பினரே துணை வேந்தர்களாக நியமிக்கப்பட்டனர். ஆதி திராவிடர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், முதல் தலைமுறைப் பட்டதாரிகள், ஏழை எளிய குடும்பத்திலிருந்து வந்தவர்களை துணைவேந்தர்களாக அரியணை ஏறச் செய்த பெருமை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைச் சாரும். அப்படி நியமிக்கப்பட்ட துணைவேந்தர்கள் தங்கள் நிர்வாகத்தில் சமூக நீதியினை நிலைநாட்டி ஏழை எளிய மாணவர்களுக்கு தங்கு தடையின்றி கல்வி பெறச் செய்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### முதல் தலைமுறை மாணவர்களையும் மிக உயர்ந்த பதவிகளிலும் உலகநாடுகளிலும் பணி பெறச் செய்தவர்!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கொண்டுவந்த பல்வேறு சட்ட மாற்றங்கள் மற்றும் சலுகைகள், வறுமையால் வாடிய கிராமப்புறத்தில் வாழ்கின்ற மாணவர்களுக்கு மிகப்பெரிய வரப்பிரசாதமாக அமைந்தது.

•(2006-2011) கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் சேர்க்கையில் 69% இடஒதுக்கீடு.

•இளநிலை கலை மற்றும் அறிவியல் பிரிவு மாணவர்களுக்கு கல்விக் கட்டணம் இல்லை.

•முதுகலை மற்றும் அறிவியல் பிரிவு மாணவிகளுக்கு கல்விக் கட்டணம் இல்லை.

•2006-2011ல் மாணவிகளுக்கான விடுதிகள் கட்டப்பட்டன.

•மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு வசதியாக கல்வி நிறுவனங்களில் சாய்வுதளம் அமைக்க அரசாணை (GO) நிறைவேற்றப்பட்டது. மாற்றுத்திறனாளிகளுக்கு தரைத் தளத்தில் வகுப்புகள் நடத்த வேண்டும் என்று அரசாணை (GO) நிறைவேற்றப்பட்டது.

•பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ்.

•SC/ST/BC மற்றும் MBC மாணவர்களுக்கான உதவித்தொகை இரட்டிப்பாக்கப்பட்டது.

•2008 ஆம் ஆண்டு திருவாரூரில் மத்தியப் பல்கலைக்கழகம் தவிர தந்தை பெரியார் தொழில்நுட்பக் கழகம், திருவள்ளுவர் பல்கலைக்கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், கல்வி நிறுவனங்களை அமைத்தல்.



**முனைவர் க. திருவாசகம்**
முன்னாள் துணைவேந்தர்
சென்னைப் பல்கலைக்கழகம்,
பாரதியார் பல்கலைக்கழகம்

தகவல் தொழில் நுட்பம் உலகளவில் முக்கியத்துவம் பெற்று, வெளிநாடுகளில் வேலை வாய்ப்புகள் பெரும் அளவில் இருந்த தறுவாயில், சென்னை தரமணியில் கி.பி. 2000 ஆம் வருடத்தில், டைடல் பார்க் ஒன்றை, முன்னாள் பிரதமர் வாஜ்பாயி அவர்கள் தொடங்கி வைத்தார். முத்தமிழறிஞர் கலைஞர் இதனைப்போல தமிழ்நாட்டின் பிற மாவட்டங்களிலும் ஐ,டி. பார்க்குகளை உருவாக்கி, தமிழ்நாட்டின் பல லட்சம் இளம் பட்டதாரிகளை அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா என்று பல நாடுகளில் பணிபெறச் செய்த பெருமை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களையே சாரும். இன்றும், கிராமப்புற மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய பெற்றோர்கள், விமான நிலை யங்களில் தங்கள் பிள்ளைகளை வெளிநாட்டிற்கு வழியனுப்பும் காட்சிகள் எவ்வளவு மகிழ்ச்சியினைத் தருகின்றதோ அந்த அளவிற்கு இதன் பெருமையும் நன்றியும் டாக்டர் கலைஞர் அவர்களைச் சென்றடையும் என்பது நிதர்சனம்.

### பிற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டு!

இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களைவிட, கல்வி மேம்பாட்டில் தமிழ்நாட்டை முன்னோக்கி நிலை நிறுத்தியவர் கலைஞர். கல்வி நிறுவனங்களில் 69 சதவீத இடஒதுக்கீட்டைப் பெற்றுள்ள ஒரே மாநிலம், தமிழ வியை இலவசமாக்கிய கலைஞர் அவர்கள், ஈ.வி.ஆர் நாகம்மை நினைவு பெண்களுக்கான இலவச பட்டதாரி கல்வித் திட்டத்தையும் தொடங்கினார். கல்வியை அனைவருக்கும், குறிப்பாக சமூகத்தின் பின்தங்கிய பிரிவினருக்குக் கிடைக்கச் செய்யும் இதைப் போன்ற திட்டங்களை அவர் தொடர்ந்து செயல்படுத்தினார். தொழில் முறை படிப்புகளில் கிராமப்புற மாணவர்களுக்கு 15 சதவீத இடஒதுக்கீடு இருந்தது. தொழில்முறை படிப்புகளுக்கான நுழைவுத்தேர்வு ரத்து செய்யப்பட்டது.

இந்தியாவில் முதன்முதலாக டாக்டர் அம்பேத்கர் சட்டக் கல்லூரி அமைக்கப்பட்டது. இலவச கணினி பயிற்சி தொடங்கப்பட்டது. அரசு பள்ளிகளில் மதிய உணவுடன் 5 முட்டை, வாழைப்பழம் வழங்கவேண்டும் என வலியுறுத்தினார். மாநிலத்தில் உள்ள பெண்கள், ஓ.பி.சி., எஸ்.சி. மற்றும் எஸ்டி மாணவர்களுக்குக் கல்வி கிடைக்கவேண்டும் என்பதற்காக கலைஞர் அவர்கள் கொண்டு வந்த பல திட்டங்களில் இவை சில மட்டுமே.

கல்வியில் சமூகநீதியை நிலைநாட்டுவதில் முக்கியப் பங்கு வகித்தவர் கலைஞர் அவர்கள். சமூகத்தின் விளிம்பு நிலை பிரிவினரை உயர்த்துவதற்காக கல்வித்துறையில் மிகப்பெரும் மாற்றத்தையும் புரட்சியையும் ஏற்படுத்தியவர் கலைஞர் அவர்கள்தான்!



## ‘முதற் குடிமகன்!’

**ரோ**மாபுரி மன்னர் அகஸ்டஸ், தம்மை மன்னர் என்று மற்றவர்கள் அழைப்பதை விரும்பவில்லை. மக்களாட்சியின் மாண்பு ஓங்கிடும் பொருட்டு, ரோமானியக் குடியரசின் ‘முதற் குடிமகன்’ என்று, தாம் அழைக்கப்படுவதையே அவர் பெரிதும் விழைந்தார்.

**- கலைஞர்**